[*1995 மார்ச் 28*

மாவட்டம் பர்கூரிலே இருக்கிற ஐ.ஈ.எல்.சி. பள்ளி, சூசையப்பர் பள்ளி, மதுரை, அமலராக்கினி பள்ளி, திருவண்ணாமலை, அன்னை ஜே. கே. கே. சம்பூர்ணியம்மாள் பள்ளி, சேலம், லூசிய பள்ளி, தூத்துக்குடி ஆகியவை அரசு மான்யம் பெறக் கூடிய பள்ளிகள். இந்த பள்ளிகளைத் தவிர, அரசு நடத்துகிற பள்ளிகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. ஆகவே புதிதாக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி முதலமைச்சராக ஆனதற்குப் பின்னால், கண் பார்வையற்றோருக்கு அதிகமான அளவிற்கு சலுகைகள் கொடுத்தார்கள். அதன் விளைவாக கண்பார்வையற்றோர் எண்ணிக்கை இப்போது குறைந்து வருகிறது. இப்போது *973* மாணவ மாணவியர்களே பயிலுகின்றனர். கூடுதலாக இல்லை. கூடுதலாக வந்தாலும் பள்ளிகளிலே இடம் இருக்கிறது. ஆகவே புதிதாகத் தொடங்கவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு மிக்க நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, பார்வை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட- பெண்கள்-நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி--ஏன் இன்னும் சொல்லப்போனால் கணவனால் கைவிடப்பட்ட பார்வையற்ற பெண்கள் மட்டுமல்லாமல், தகப்பனால் ஒரு அரசியல் தலைவரால் கைவிடப்பட்ட.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள். . வினா எண் *134* (குறுக்கீடு), ஏற்கனவே மாவட்டந்தோறும் அமைக்கவேண்டுமென்று துணைக் கேள்வி கேட்டீர்கள். ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே துணைக் கேள்வி அதிலே இல்லை.

வினா எண் *134*, திரு. வி. ரவிச்சந்திரன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

134—

கீழ்க்கரையில் சத்துணவுக் கூடம் அமைத்தல்

36165*—திரு. வி. ரவிச்சந்திரன் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 28]

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, கீழ்க்கரையில் சத்துணவுக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ).: இல்லை.

திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள், 'இல்லை' என்று சொல்லிவிட்டார்கள். உப்பிலியாபுரம் தொகுதியிலுள்ள கீழ்க்கரை சத்துணவுக் கூடம் ஏழையெளியவர்களுக்காக, அந்தக் குழந்தைகளுக்காக கண்டிப்பாக அமைத்துத் தரவேண்டும். அதற்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதி கீழ்க்கரை கிராமத்தில் மொத்த ஜனத்தொகையே 148 பேர்தான் இருக்கிறார்கள். இதில் 2 முதல் 4 வயதுவரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 14 பேர் தான் இருக்கிறார்கள். 5 வயது முதல் 15 வயதுவரை உள்ளவர்களின் எண்ணிக்கை இதுவரை ஏதும் இல்லை என்று தகவல் மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலேயிருந்து கிடைக்கப் பெற்றிருக்கிறது. ஒரு இடத்திலே புதிய பாலர் பள்ளி சத்துணவு மையம் அமைக்க 2 வயது முதல் 4 வயதுவரை உள்ள குழந்தைகள் போதிய அளவு இருக்க வேண்டும். 2 வயதிலேயிருந்து 4 வயதுவரை உள்ள பிள்ளைகளுக்கு சத்துணவுக் கூடம் துவக்க ஜனத்தொகை குறைந்தது ஆயிரமாவது இருக்க வேண்டும். இது தவிர குறைந்தபட்சம் 25 குழந்தைகள் சத்துணவு சாப்பிட தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். கீழ்க்கரை கிராமத்தில் 2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருப்பதால், ஜனத்தொகை வரையறுக்கப்பட்ட அளவிற்கும் குறைவாக இருப்பதால் அங்கே சத்துணவுக் கூடம் அமைக்கின்ற கேள்விக்கு இடமில்லை. கீழ்க்கரை கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் சோழமார்த்தி என்னும் இடத்தில் சத்துணவுக் கூடம் இயங்கி வருகிறது. அதில் 25 பிள்ளைகள் இருக்கிறார்கள். இதிலே இருக்கிற அந்த குறிப்பிட்ட பிள்ளைகளும் அங்கே சென்று உணவருந்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.